


# நீங்கள் எழுத்தாளர் ஆக வேண்டுமா?

தமிழ் தன்னைத் தானே வாழ்த்திக் கொள்ளும் சக்தி மிக்கது. ஆயினும் 'தமிழ் வாழ்க!' என்கிறோம். இறைவன் தன்னையும் தானே வாழ்த்திக் கொள்ளும் அருளாளன். எனினும் 'நமச்சிவாய வாழ்க' என்கிறது சிவபுராணம். என்றைக்கு நம்மிடமுள்ள திறமையை, சக்தியை உணருகிறோமோ, தெரிந்து கொள்கிறோமோ அப்பொழுதுதான் வெற்றி கிடைக்கும். சாதனை படைக்க முடியும். நமக்கு என்ன தெரியாது என்பது நமக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள ஆர்வம் இருந்தால் போதும். என்றைக்கு உங்களுக்குத் தெரியாதது என்னவென்று தெரியவருகிறதோ அன்றுதான் உங்கள் வெற்றியின் ஆரம்பம்.

நாம் வாழ்க்கையினை முழுமையாக வாழ, நமது உணர்வுகளை ஒழுங்குபடுத்துவதை ஒரு இலக்காகக் கொள்ளவேண்டும். அதற்குரிய விதிமுறைகளைத் தெரிந்துகொண்டால் அது ஒரு எழுச்சிமிக்க சாதனை. எதையெதையோ தெரிந்துகொள்ள எவ்வளவோ நாட்களை செலவழிக்கிறோம். ஆனால் எந்த ஒரு காரியத்தையும் நம்மால் செய்யமுடியுமா? அதற்குண்டான ஆற்றலும் திறமையும் நம்மிடம் இருக்கிறதா? நம்முடைய பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதை அறிந்து கொள்ள நேரத்தை செலவழிப்பதில்லை.

*"பல் சான்றீரே பல்சான்றீரே*
*கயல்முன் அன்ன நரைமுதிர் திரைகவுள்*
*பயனில் மூப்பின் பல்சான்றீரே*
*கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்தினல் ஒருவன்*
*பிணிக்கும் காலை இரக்குவீர் மாதோ*
*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"*

புலவர் 'நாவெடுத் தலையார்' என்பவர் பல ஆண்டுகள் ஓயாது சிந்தித்து இந்தப் பாடலைப் பாடியுள்ளார் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பாடல் வழியாக உலகில் உள்ளோர் வாழும்வழி எது எனக் கூறுகின்றார். உலகில் உள்ள சான்றோர்களை எல்லாம் அழைத்துக் கூறுகின்றார். சான்றோர்களிடம் சொன்னால் தான், அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்

என்பதால் தான் கண்ட உண்மையினை அவர்களிடம் கூறுகின்றார்.

ஒவ்வொருவரும் தம் இறுதிக்காலத்தில், 'அய்யோ அதைச் செய்திருக்கலாமே. இதைச் செய்திருக்கலாமே' என்று வருந்தும் இயல்பு கொண்டவர்களாக உள்ளனர். சிலர் அப்படி வாழ்ந்திருக்கலாம்; இப்படி வாழ்ந்திருக் கலாம் என்று நடக்காததை எண்ணி வருந்துவார்கள். புலவரோ எதையும் செய்ய வேண்டாம் என்கிறார்.

மனிதன் மனம் படைத்தவன். மனம் சிந்திக்கும் திறன் கொண்டது. சிந்தனை நன்மையினை மட்டும் தரும்; தர வேண்டும். ஆனால் வாழ்நாள் முழுவதும் நன்மையே செய்கின்றவரைக் காண இயலாது. சிலர் தீயன எண்ணிச் சிதைந்து போவதையும் நாம் காண்கிறோம். ஒருவர் மற்றவருக்கு எந்த நன்மையும் செய்யாது போனாலும், தீங்கேதும் நினையாது இருந்தாலே போதும் என்கிறார். அதுதான் உலக மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவழி என்பதைக் கண்டறிந்துள்ளார்.

'சிந்தனை நன்மையினை மட்டுமே தரும்' என்று புலவர் சொல்லியிருப்பதை எண்ணிப் பாருங்கள். சிந்தனை ஒன்று மட்டுமே நாம் வாழ்வதற்கான வழியினை வகுத்துக் கொடுக்கும். சிறப்பான சாதனைகள் புரிய நிறைய படித்திருக்க வேண்டும். அதிபுத்திசாலியாக இருக்க வேண்டும், எல்லாமும் நமக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதெல்லாம் தேவையில்லை. எல்லாம் தெரிந்தவர் யாருமே கிடையாது. சாதனைபுரிய கடினமான, தீவிரமான உழைப்புதான் தேவை. அப்படி உழைக்கத்

தொடங்கும்முன், 'எதற்காக உழைக்கிறோம்? ஏன் உழைக்க வேண்டும்? இந்த உழைப்பு நமக்கு வெற்றியைத் தருமா?' என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்கள் குறிக்கோளை நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு எழுத்தாளர் ஆக முயற்சிக்கும்முன், இந்தக் கேள்விகளுக்கான விடையைக் கண்டறியுங்கள். விடையைக் கண்டபின் என்ன செய்ய வேண்டும்?

சிந்தித்து முடிவெடுத்தபின், 'நான் எடுத்த முடிவு சரியானது. இதை அடைவதிலிருந்து எந்த சக்தியும் என்னைத் தடுக்கமுடியாது. அடுத்தவர் என்ன சொல்வார் என்பதைப் பற்றிக் கவலை இல்லை. நான் உழைக்கப் போகும் உழைப்பினால் ஏற்படும் உணர்வு எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. என் உள்ளுணர்வை நான் மதிக்கிறேன். எனக்கு உற்சாகமூட்டும் இந்த வேலையை நான் செய்து முடிப்பேன்' என்று உறுதி கொள்ள வேண்டும். கவிதை எழுதுவதோ, கதை எழுதுவதோ, புத்தகம் எழுதுவதோ வெறும் பொழுது போக்கு வேலை இல்லை.

உங்களால் மட்டுமே எழுத முடியக்கூடிய ஒரு புத்தகம் பற்றி பல ஆண்டுகளாக நினைத்துக் கொண்டிருக் கலாம். இந்தக் கனவு நனவாவதற்கான பேரார்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் திறமையைத் தட்டி எழுப்ப இந்த ஆர்வம் மட்டுமே போதும். அதை எப்படி இயங்க வைப்பது என்று தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

உங்கள் உள்ளுணர்வின் குரலுக்கு அலுவலர் அனுமதி அளிப்பது தான்.

'எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இளமைப் பொழுதும் சோராது இருத்தல்' என்று வீரமுழக்கமிட்டு, 'எழுதுகோலும் தெய்வம்; எழுத்தும் தெய்வம்' என்று சொன்னான் மகாகவி பாரதி, அப்படி எழுதுகோலையும் எழுத்தையும் தெய்வமாகக் கொண்டு எழுதத் தொடங்குங்கள்.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு - குறள் 396*

என்று வள்ளுவர். மணலில் உள்ள ஊற்றில் தோண்டிய அளவிற்கு நீர்சுரக்கும். வற்றாத ஜீவநதிகளாக வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருக்கின்ற அறிவு ஜீவிகளைப் போல நாம் அறிவை வளர்த்துக் கொள்ளவில்லை என்றாலும், ஊற்று நீரளவாவது அறிவை வளர்த்துக் கொள்ள லாமே. கட்டறுத்துச் சென்ற காவிரியின் வெள்ளம்போல் நாடு முழுவதும் பரந்து, விரிந்து, பாய்ந்து தமிழ் பரப்பவில்லை என்றாலும், சிலருடைய தாகத்தைத் தீர்க்கக்கூடிய தெளிந்த நீர்க் குட்டையாகவாவது வாழ்ந்து காட்டலாமே என்பதே என்னுடைய எண்ணம்.

நான், வாழ்ந்துகொண்டிருப்பதைப் பற்றி சொல்லுகிறேன் என்று யாரும் தவறாக நினைக்க வேண்டாம். நான் செய்திருப்பதைப் போல நீங்களும் செய்தால் உங்கள் எண்ணம் நிறைவேறுமே என்பதற்காகச் சொல்கிறேன். நிறையப் புத்தகங்கள் எழுத வேண்டும்

என்ற எண்ணத்தோடுதான், அதையே நோக்கமாக வைத்துத்தான் நிறையப் புத்தகங்கள் படிக்கிறேன். இரவு பத்து மணியிலிருந்து பன்னிரெண்டு மணி வரை, காலை 6.00 மணியிலிருந்து 7.30 மணி வரை எதையாவது ஒரு நல்ல புத்தகத்தைப் படித்துக்கொண்டோ, அல்லது எழுதிக்கொண்டோ இருப்பேன். காலை பத்து மணி யிலிருந்து இரவு ஒன்பது மணிவரை நகைக்கடையில் இருப்பேன்.

நான் நிறையப் புத்தகங்களைப் படிப்பதற்கும், எழுது வதற்கும், குடும்பத்தை, குழந்தைகளை அன்போடு பராமரிப்பதற்கும், நான் சார்ந்துள்ள பத்து சேவைச் சங்கங்களின் செயல்பாட்டைக் கவனிப்பதற்கும் நேரத்தை பகிர்ந்து கொள்வேன். என் பேரக்குழந்தைகளோடும், முப்பத்தைந்து முப்பத்தாறு வயதுள்ள என் அருமைப் பிள்ளைகளோடும், மகள்களோடும், மருமகள் மருமகன் களோடும் பேசி மகிழ்கிறேன். சிலநேரங்களில் என் இளைய மகன் பொறியாளரோடு, ஆழமான அவசியமான, பயனுள்ள சில தலைப்புகளில் வாதம் செய்வேன். அவனிடமிருந்து நிறையச் செய்திகளைக் கற்றுக் கொள்வேன். நிறைய செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக செய்திகளைத் தேடி அலைவேன்.

நான் எழுதும்போது குழந்தைகள் சப்தம் போடக் கூடாது. டி.வி. போடக்கூடாது. வீடே அமைதியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்க மாட்டேன். எவ்வளவு கூச்சலிலும், இரைச்சலிலும் சிந்தித்து எழுதுவேன். குடும்பப் பிரச்னைகள், பொருளாதாரப் பிரச்னைகள் எனக்கு நிறைய உண்டு. இருந்தாலும் –

டி.வி.யில் நமக்குத் தேவையான சேனலை வைத்துக் கொள்வதைப் போல, எழுதுவதைப் பற்றிய எண்ணம் மட்டுமே என் மனதில் நிறைந்திருக்கும்.

என்னுடைய கடின உழைப்பு என் குடும்பத் தினருக்கோ, நண்பர்களுக்கோகூடத் தெரியாது. 'என்னப்பா..... காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி ராத்திரி பன்னிரெண்டு மணிக்கும், விடியற்காலை ஆறு மணிக்கும் கூட படித்துக் கொண்டு, எழுதிக் கொண்டு இருக்கிறீர்கள்' என்று பிள்ளைகள் கேட்பார்கள். நான் மௌனத்தையே பதிலாக வைப்பேன். பேச்சு பெரியதுதான். ஆனால் மௌனம் அதைவிடப் பெரியது. நிறைய நேரங்களில் பேசுவதைக் காட்டிலும் மௌனமே உயர்ந்ததாகக் கருதப்படும்.

என் எழுத்தைப் பற்றி நானே அதிசயப்படுவதுண்டு. நான் அதிகம் படிக்காதவன். பேராற்றல் கொண்டவனும் கிடையாது. நான் எழுதிக் கொண்டிருக்கும்போது அது எப்படி நடக்கின்றது என்று எனக்கே தெரியவில்லை. எங்கிருந்தோ வார்த்தைகள் தோன்றி நான் எழுதுகின்ற பக்கங்களை நிரப்புகின்றன. அவை எங்கிருந்து வருகின்றன? எனக்கு சொல்லிக் கொடுப்பது யார்? எனக்குத் தெரியாது. பல நேரங்களில் என் சந்தேகங் களுக்கு இரவு நேர தூக்கத்தில் விடை கிடைக்கும். தூக்கத்தில் நான் யாரிடமோ என் சந்தேகத்தைக் கேட்டு வாதம் செய்வேன். அவரோ எனக்கு தகுந்த விளக்கங்களோடு பதில் சொல்வார். எவ்வளவு நேரமாக இருந்தாலும் உடனே எழுந்து, பக்கத்தில் உள்ள நோட்டுப் புத்தகத்தில் விவரமாக எழுதிவைப்பேன். என் பக்கத்தில்

ஒரு நோட்டுப் புத்தகம், மூக்குக்கண்ணாடி, பேனா எப்போதும் இருக்கும்.

நான் முறைப்படி தமிழைக் கற்காதவன். ஆதலால் புத்தகங்கள் எழுதும்போது வலுவான சந்தேகங்கள் என்னை வாட்டும். நான் நிறைய புத்தகங்கள் வைத்திருக்கிறேன். இறைவா! நீ இந்த சந்தேகத்தைப் போக்க சரியான பதில் சொன்னால்தான் இந்தத் தலைப்பை எழுதி முடிக்க முடியும். உடனே சொல்' என்று உரிமையோடு கேட்டு புத்தக அலமாரியில் உள்ள ஒரு புத்தகத்தை எடுப்பேன். அதில் நான் தேடுகின்ற விடை கிடைக்கும். இப்படி நமக்கு அதிசயத்தையும், ஆர்வத்தையும் தூண்டும் பல விஷயங்கள் நம் வாழ்க்கை யில் உண்டாகி நமக்கு உற்சாகத்தை ஊட்டுகின்றன. கண்ணுக்குத் தெரியாத, விளக்கிச் சொல்ல முடியாத ஒரு சக்தி என்னுள் மறைந்து நான் எழுதுவதற்கு உதவுகிறது. நான் நண்பர்களிடம் பேசுவதைப் போலவே இறை வனிடம் பேசுவேன். கோபம் வந்தால் இறைவனிடமே சண்டை போட்டு வாதம் செய்வேன். அவன் செய்கின்ற ஒவ்வொரு நன்மைக்கும் உடனே நன்றி சொல்வேன்.

கல்லூரி மாணவர் ஒருவர் என்னிடம் வந்து, 'ஐயா, எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தியைப் பற்றி நாளை நான் பேசவேண்டும். அவரைப் பற்றிய செய்திகளை எனக்கு எழுதிக் கொடுங்கள்' என்று கேட்டார். எனக்கு அவரைப் பற்றி நிறையத் தெரியாது என்று சொல்ல அச்சப்பட்டு 'சரி காலையில் தருகிறேன்' என்று சொல்லி விட்டேன். என்ன செய்வது என்றே தெரியவில்லை. எங்கள் ஊருக்கு அடுத்த ஊரான ஆம்பூரில் அன்று

'விஸ்வகர்மா சமூகத்தினர்' எனக்குப் பாராட்டு விழா வைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஏற்புரை வழங்கினேன். அவர்கள் எனக்கு நினைவுப் பரிசாக 'கல்வி வளர்த்த தமிழ்' என்ற நூலைக் கொடுத் தார்கள். இது யார் செயல் என்று சொல்வது; என்னுடைய தேவை என்ன என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? இறைவன் ஒருவனுக்கு மட்டுமே தெரியும். இறைவனுக்கு நன்றி சொல்லிவிட்டு, அன்று இரவே எழுதிவைத்து காலையில் அந்தத் தம்பியிடம் கொடுத்தேன்.

'தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பதிலிருந்து வெளிவந்து மற்றவர்களைப் பற்றிய சிந்தனையை வளர்த்துக் கொள்வதுதான் கருணை என்பது' என்கிறார்கள். அந்தக் கருணை எனக்கு கொஞ்சம் உண்டு. அதனால்தான் இறைவன் என்மேல் அதிகமான கருணை காட்டுகிறார். எனக்கு இடுப்பு எலும்பு உடைந்தபோது 'சென்னை மியாட் ஆஸ்பத்திரியில்தான் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென' பிள்ளைகள் விரும்பினார்கள். என் மனதில் இறைவன் ஒரு உத்தரவு போட்டான். என் சின்ன மகனை அழைத்தேன், 'டேய் கண்ணு, நேரா குடியாத்தம் பாலாறு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் என்னை அட்மிட் செய்' என்றேன். அந்த மருத்துவமனையில்தான் சேர்த்தார்கள். எலும்பு அறுவை சிகிச்சை மருத்துவர்கள் டாக்டர். மஞ்சுநாதன், டாக்டர். ரங்கசாமி இருவரும் அறுவை சிகிச்சை செய்து என்னை குணப்படுத்தினார்கள். பிறர் துன்பம் கண்டு நான் துவண்டு போயிருக்கிறேன். பலர் நலனுக்காக பல உதவிகளை செய்திருக்கிறேன். அதனுடைய பிரதிபலன்

தான் என் நலனுக்காக உறவினர்கள், நண்பர்கள் நிறையப் பேர் உதவிக்கரம் நீட்டினார்கள்.

எனக்கு பத்து சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் என்னோடு சேர்த்து நாங்கள் பதிமூன்றுபேர். என்னுடைய முப்பத்திரண்டாம் வயதில் என் தந்தையார் காலமாகி விட்டார். குடும்பச் சுமைகளை சுமக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானேன். வாஷிங்மெஷினில் சிக்கிக் கொண்ட துணியைப் போல குட்டிக்கரணம் போட்டுத் துவண்டுபோனேன். வாஷிங்மெஷினில் போட்டதனால் துணி அழுக்கைத் தொலைத்துவிட்டு தூய்மையாக ஆனதைப் போல, அனுபவத்தால் ஓரளவு சித்தம் தெளிவு பெற்றேன். "பார்த்தது கோடி பட்டது கோடி சேர்த்தது என்ன? சிறந்த அனுபவம்" என்று கண்ணதாசன் சொன்னதைப் போல ஓரளவு அனுபவ அறிவைப் பெற்றேன்.

'எழுத்தாளன் ஆக வேண்டுமா?' என்ற நூலின் தலைப்புக்கு வருவோம். நான் முறைப்படி தமிழ் கற்காதவன். இன்றுவரை வெண்பா, விருத்தம், யாப்பு என எதுவுமே புரியாதவன். உயிர் வாழ்வதற்கு சுவாசம் எவ்வளவு முக்கியமோ அதைப்போல எழுத்தாளர் ஆவதற்கு புத்தக வாசிப்பு முக்கியம். சுவாசிப்பது – வாசிப்பது இரண்டும் ஒன்றுதான். புத்தகம் படிக்கும் பழக்கம் திடீரென்று வராது. இளமையிலிருந்தே நாவல்களையோ, கட்டுரைகளையோ, கவிதைகளையோ, வார மாத இதழ்களையோ, செய்தித்தாள்களையோ படிக்கும் பழக்கம் இருந்தால்தான் ஒருமணி நேரம், இரண்டு மணி நேரம் தொடர்ந்து படிக்கும் பழக்கம் வரும்.

ஆரம்பப் பள்ளிகளில் கூட படிக்காத கிராமவாசிகள் நிறையபேர் 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்' போன்ற பெரிய பெரிய நூல்களை இரண்டு மூன்று முறை திரும்பப் திரும்பப் படித்து, திரைப்பட வசனம் சொல்வதைப் போல சொல்பவர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கூடமே சென்று படிக்காதவர்கள் மகாபாரத சொற்பொழிவாளர்களாக இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் சென்று படிக்காதவர்கள் தங்களை பூச்சியம் என்று நினைக்கக் கூடாது. "ஒன்றைப் பத்தாகவும்; நூறாகவும்; ஆயிரமாகவும்; இலட்சமாகவும்; கோடியாக வும் ஆக்கிக்காட்ட உதவும் வெறும் பூச்சியங்கள்" என்கிறார் கவிஞர் அறிவுமதி. நிறைய நல்ல நூல்களைத் திரும்பத் திரும்ப படிப்பதாலும், சான்றோர் பெருமக்களின் மேடைப் பேச்சுக்களைக் கேட்பதாலும் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

வள்ளுவர் சொன்னதைப் போல, 'படிப்பதற்குத் தக்க நூல்களைப் பழுதில்லாமல் படிக்க வேண்டும். நீங்களாக ஏதாவது ஒரு தலைப்பைத் தேர்வு செய்து நான்கு பக்க, ஐந்து பக்கக் கட்டுரைகள் எழுதிப் பழக வேண்டும். படித்ததை நினைவில் வைத்துக் கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எந்தத் தலைப்பைப் பற்றி, எந்தப் பொருள்பற்றி எழுத நினைக் கிறீர்கள் என்பதை முதலில் முடிவு செய்யுங்கள். அந்தப் பொருள் பற்றிய எவ்வளவு செய்திகள் உங்களுக்குத் தெரியும் என்பதை யோசித்துப் பாருங்கள். அந்தப் பொருள்பற்றி எழுதுவதாக உறுதி செய்தீர்களேயானால் அந்தப் புத்தகத்திற்கான தலைப்பைத் தேர்வு செய்யுங்கள்.

முந்தைய தலைமுறையினர் பாரபட்சமின்றி சமூக நிகழ்வுகளை, சமூக அவலங்களை எழுதுவதற்குத் தயங்கு வார்கள். அவர்களுக்கு முன்பு வாழ்ந்த இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புகளைக் கண்டு பயப்படு வார்கள். தாம் எழுதுகின்ற கட்டுரைகளில், கவிதைகளில் குற்றங் குறைகள் வந்துவிடுமோ என்று தயங்குவார்கள். எதிர்காலத் தலைமுறைக்கான அறநெறி, சமூக ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரத்தை எடுத்து எழுதுவார்களே தவிர, நடைமுறை வாழ்க்கையின் குறைபாடுகளை எழுத மறுப்பார்கள். சமூக வாழ்வைப் பற்றி, குடும்ப வாழ்க்கைகளைப் பற்றி எழுதுவார்களே தவிர தனிமனித வாழ்க்கையைப் பற்றி, சமுதாய நெருக்கடியைப் பற்றி எழுதமாட்டார்கள்.

ஆனால் இன்றைய தலைமுறையினர் போதுமான வயதும் அனுபவமும் இல்லையென்றாலும், எந்தவிதத் தயக்கமும் இன்றி எந்தத் தலைப்பைப் பற்றியும் எழுதுகிறார்கள். எப்படிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் எழுதலாம். எந்தத் தலைப்பைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற சுதந்திரத்தை காலம் தந்துள்ளது.

நிஜமான எழுத்தாளர்களின் படைப்புகள் பாரபட்ச மின்றி சமூக நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதுதான். அசலான வாழ்வின் நிஜமான பதிவு என்பதுதான். இலக்கியம் என்பது முந்தைய தலைமுறையினரின் நூல்களிலிருந்து, பிந்தைய தலைமுறையினர் பெறும் அறிவு. அனுபவம் என்பது மிகவும் முக்கியம். இன்றைய

எழுத்தாளர்கள் முந்தைய தலைமுறையினரின் எழுத்து முறையை எந்த அளவுக்குப் பின்பற்றுகிறார்கள்; எந்த அளவுக்கு நிராகரிக்கிறார்கள் என்பதை முக்கியமாக கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற இன்றைய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் புனிதங்களைப் போற்றக் கூடியதாக, புனிதங்களை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

நீங்கள் கவிதைகள், உரைநடைகள் எதை வேண்டுமானாலும் எழுதிப் பழகலாம். கவிதைகள் சிறப்பு வாய்ந்தவை. உரைநடை நேரடியானது, எளிதானது, இயற்கையான வடிவம் கொண்டது. உரைநடைக் கட்டுரைகள் நமக்கு தகவல் அறிவை அதிகரிக்க செய்வதால் மிக உபயோகமானவையாக இருக்கும். கண்ணதாசனின் உரைநடை அவருடைய கவிதைகளை விட இனிமையும், நளினமும், சிறப்பும் கொண்டதாக இருக்கும். நீங்கள் கவிதை எழுதினாலும், உரைநடை எழுதினாலும் எழுதுகிற மொழியில் நுணுக்கம், இறுக்கம், எளிமை, இயற்கைத் தன்மை, ஆழம் இதெல்லாம் இருக்க வேண்டும்.

நீங்கள் திரைப்படத்திற்காக கதை எழுதினாலும், திரைக்கதை வசனம் எழுதினாலும், பாடல்கள் எழுதினாலும், நாவல்கள் எழுதினாலும் சரி, அது ஏற்படுத்தும் பாதிப்பின் ஆழம்தான் அது நல்ல திரைக்கதையா? இல்லையா? நல்ல பாடலா இல்லையா? நல்ல நாவலா இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும். நல்ல நாவலாக இருந்தால்தான் இதழ்களில் வெளியிடுவார்கள்.

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ் பெண்ணே! உன்
நலம் காணார் ஞாலம் காணார்!

என்றார் பாவேந்தர் பாரதிதாசன் – நாவலைப் பற்றிச் சொல்வதெல்லாம் சினிமாவுக்கும் பொருந்தும். சினிமா ஒரு முக்கியமான ஊடகம். படிக்கத் தெரிந்தவனுக்குத்தான் இலக்கியம். ஆனால் சினிமா அப்படி இல்லை. படித்தவன், படிக்காதவன் என்று எல்லோரும் பார்க்கக் கூடியது. ஆகவே எழுத்தைவிட இதற்கு பொறுப்பு அதிகம்.

நீங்கள் நிறையப் புத்தகங்களைப் படித்தால்தான் புதிய சிந்தனைகள் உருவாகும். புதிய சிந்தனைகள் உருவானால்தான் உங்களால் எழுத முடியும். நீங்கள் படிக்கின்ற போது ஏற்படுகின்ற ஒரு பொறிதான் உங்கள் எழுத்துக்கு அஸ்திவாரமாக அமையும். அதேபோல நீங்கள் சிந்திக்கும்போதுதான் உங்கள் எழுத்தைக் கொண்டு போவதற்கான பாதை தெரியும். பேருந்துகளில், கார்களில், ரயில்களில் பயணம் செய்யும்போதும், கழிவறையில் இருக்கும்போதும்தான் எனக்கு அதிகமான சிந்தனைகள் தோன்றும். கண்களை மூடிக்கொண்டு ஒருமணிநேரம் இரண்டு மணி நேரம் படுத்திருப்பேன். பிள்ளைகள் நான் தூங்குவதாக நினைத்துக் கொண்டிருப்

பார்கள். நானோ எழுத வேண்டிய புத்தகத்திற்கான வடிவத்தை ஒரு திரைப்படம் பார்ப்பதைப் போல மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பேன். புதிய நூலுக்கான மூலச்செய்திகளைப் பெறாமல், நூலுக்கான அஸ்திவாரம் போடாமல் எழுதுவது சாத்தியமில்லை. உண்மையும் கற்பனையும் கலந்த கலவைதான் எழுத்து என்பது.

எழுத்தாற்றல் என்பது ஒரேநாளில் வந்துவிடாது. தோன்றுகின்ற சிந்தனைகளை, செய்திகளை, அனுபவங்களை, எண்ணங்களைச் சேமித்து வைக்க வேண்டும்.

**பேச்சு என்பது ஓடுகின்ற நதி**
**எழுத்து என்பது நிலையான கடல்**
**பேச்சு என்பது தென்றல்; எழுத்து என்பது சூறாவளி**
**பேச்சு என்பது விதை; எழுத்து என்பது விளைநிலம்!**

'கல்கண்டு' பத்திரிகை ஆசிரியர் தமிழ்வாணன் அவர்கள் துப்பறியும் மர்மக்கதைகளை, பேய்க்கதைகளை எழுதுவதில் வல்லவர். 'சங்கர்லால்' எனும் ஒரு கற்பனைத் துப்பறியும் நிபுணரை உருவாக்கி, அந்த சங்கர்லாலுக்கு உயிர் கொடுத்து உலகம் முழுவதும் சுற்றச் செய்தவர் தமிழ்வாணன். உண்மையிலேயே சங்கர்லால் என்று ஒரு துப்பறியும் நிபுணர் இருக்கிறார் என்று இன்றுவரை நம்பும்படி செய்துவிட்டார். சங்கர்லால் எப்படி இருப்பார், அவர் அணிந்துகொள்ளும் காலணி எப்படி இருக்கும், அவர் எப்படி டை கட்டிக் கொள்வார், அவர் உட்காரும் நாற்காலி எப்படி இருக்கும் என்பதையெல்லாம்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்வாணன் வர்ணித்திருந்ததை இன்னும் வாசகர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். அதுதான் அந்த எழுத்தாளரின் சிறப்பு.

அந்த டிடக்டிவ் சங்கர்லாலை உலகமெல்லாம் சுற்றச் செய்து, பயங்கர கொலைக் குற்றங்களை எல்லாம் துப்பறியச் செய்திருக்கிறார். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க சங்கர்லால் பறந்து செல்லாத உலக நாடுகளே இல்லை. தமிழ்வாணனின் கண்டுபிடிப்பான துப்பறியும் மேதை சங்கர்லால் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும், ஜப்பானுக்கும், பிரிட்டனுக்கும் விமானத்தில் பயணம் செய்யும்போது வாசகர்களும் சங்கர்லாலோடு போய்வருகின்ற அளவிற்கு அந்தப் பாத்திரப் படைப்பு அமைந்திருக்கிறது. அதைப்போல ஒரு எழுத்தாளர் படைக்கின்ற படைப்புகளில் உயிரோட்டம் இருக்க வேண்டும். எழுத்தாளர் வலம்புரிஜான் சொன்னதைப் போல, 'நாம் எழுதிய புத்தகங்களில் பக்கங்களை வாசகர்கள் புரட்டிப் படிக்கின்ற போது நம் எழுத்துக்கள் வாசகர்களைப் புரட்டிப் போட வேண்டும்.'

இதையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டு – நாம் எழுதும் கவிதையை, கட்டுரையை, கதையை வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? படித்துப் பாராட்டுவார்களா? என்று சோர்ந்து போகாதீர்கள். உலகப் புகழ்பெற்ற அறிஞர் பெர்னாட்ஷா ஆரம்பக் காலத்தில் எழுதிய எழுத்துக்களை யாரும் அச்சிட முன் வரவில்லை. முதல் ஐந்து ஆண்டுகளில் அவர் தமக்குத் திரும்பி வந்த தமது எழுத்துக்களை மீண்டும் அஞ்சலில் அனுப்பக்கூட

காசில்லாமல் வறுமையில் உழன்றார். ஆனால் மனம் தளராமல் விடாபிடியாகத் தொடர்ந்து எழுதி வந்ததால் பிற்காலத்தில் உலகம் அவர் சொல்கின்ற ஒவ்வொரு சொல்லுக்கும் செவி சாய்த்தது. எழுத்தாளர் ஆவதற்கு தளராத மனம் ஒரு முதன்மையான மூலதனம்.

அல்பேனியாவில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் பிறந்தவர்தான் ஹெலன் கெல்லர். அவள் தனது ஒன்றரை வயதில் இனம்காணமுடியாத ஒரு நோயால் தாக்கப்பட்டார். தாங்க முடியாத காய்ச்சல், கடுமையான உடம்பு வலி. அந்த நோயிலிருந்து அவள் குணமடைந்த போது அவளுக்கு கண் தெரியவில்லை. கண் பார்வையை இழந்துவிட்டாள். காது கேட்கவில்லை.

ஹெலனுக்கு ஏழுவயதான போது 'ஆன்சலிவன்' என்ற ஒரு ஆசிரியை, அவளுக்கு கைவிரல்களின் உதவியால் அசைவுகள் செய்து எப்படித் தொடர்பு கொள்வது என்பதைக் கற்றுக் கொடுத்தாள். 'பிரெய்லி' என்பவரின் உதவியால் எப்படி படிப்பது, எப்படி பேசுவது என்பதையும் கற்றுக்கொண்டாள். இரண்டிலும் தன்னிகரில்லா அளவுக்கு உயர்வடைந்தாள். இருபத்திரண்டாம் வயதில் ரெட் கிளப் கல்லூரியில் 'ஆனர்' பட்டம் பெற்றாள். தன் நண்பர்களின் உதவியால் மிகச்சிறந்த மேடைப் பேச்சாளராகவும், சமுதாய விமர்சகராகவும் மாறினாள். பிறகு, பின்தங்கிய மக்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தாள். ஐந்து புத்தகங்களை எழுதினாள். அவள் வாழ்நாளில், இருந்த எல்லா அமெரிக்க ஜனாதிபதிகளையும் சந்தித்தாள். அவள் தன்னுடைய எழுபத்தைந்தாம் வயதில்

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக 'கௌரவப் பட்டம்' பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தாள். அவளுடைய வாழ்க்கையைப் பற்றி மூன்று திரைப்படங் கள் எடுக்கப்பட்டன. அன்பர்களே! ஹெலன் கெல்லர் வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கை வழிகாட்டி.

அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு நாற்பதாவது வயது வரை அவருக்கும் அரசியலுக்குமான தொடர்பு ஒன்றும் இல்லை. அரசியல் விஞ்ஞானம் மட்டுமே படித்தவர். ஆனால் அதன்பின் படித்த சட்டத் துறையில்தான் உத்தியோகத்தை ஆரம்பித்தார். இல்லினாய்ஸ் மாகாணத்தில் ஒரு சட்டக் கல்லூரியில் அரசியலமைப்புச் சட்டம் பற்றிய பாடமெடுக்கும் ஆசிரியராகத்தான் அவரை மக்களுக்கு முதலில் தெரியும். சில வருடங்கள் பாடமெடுத்துவிட்டு, போதுமென்று ராஜினாமா செய்து விட்டு, அங்கேயே செனட் தேர்தலுக்கு நின்றார். செனட்டர் ஆனபிறகு கீழவை மேலவை என்று கொஞ்ச காலம் ஆரம்ப அரசியல் செய்துவிட்டு, 2007ம் ஆண்டு நேரடியாகக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்து அதற்கான பிரச்சாரத்தை ஆரம்பித்தார். முதலில் கட்சியளவில் ஹிலாரி கிளிண்டனை ஜெயித்து, பிறகு குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜான் மெக்கனியையும் ஜெயித்து அமெரிக்க அதிபர் ஆனார். 2008ல் அவர் அதிபரான போது அவருக்கு வயது நாற்பத்தேழு. நாற்பது வயதில் அரசியலுக்குள் – ஒரு சாதாரண செனட்டராக நுழையும் ஒருவர் ஏழே வருடங்களில் ஒரு தேசத்தின் அதிபராகிறார். எப்படி முடிந்தது? அன்பர்களே! எதுவும் முடியாததும் அல்ல. அசாத்தியமானதும் அல்ல.

நான் ஒரு எழுத்தாளன் ஆகியே தீருவேன் என்ற நம்பிக்கையோடு எழுதுகோலையும், தாளையும் கையிலே எடுங்கள். நீங்கள் சேமித்து வைத்திருக்கும் செய்திகளை எழுதத் தொடங்குங்கள். துண்டுத் தாள்களில் எழுதாதீர்கள். நீண்ட ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதுங்கள். நான் கோடு போட்ட நோட்டுப் புத்தகத்தில் எழுதுவதில்லை. கோடில்லாத வெள்ளைத் தாள் கொண்ட நோட்டுப் புத்தகத்தில் தான் எழுதுவேன். நான், எழுதுகின்ற தாளுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுப்பேன். நோட்டுப் புத்தகத்தில் வலது பக்கம் மட்டுமே எழுதுவேன். ஒரு எண்பது சதவிகிதம் எழுதி முடித்தபிறகு இந்த இடத்தில் இந்தத் திருக்குறளை, இந்தக் கவிதையை, இந்த இடத்தில் நம் நடைமுறை வாழ்க்கையின் அனுபவங்களை எழுதினால் நன்றாக இருக்கும் என்பதை இடப்பக்கம் எழுதுவேன். இல்லையென்றால் நீங்கள் ஒரே தாளை சரிபாதியாக மடித்துக் கொண்டு திரைப்படத்திற்கு வசனம் எழுதுவதைப் போல எழுதலாம்.

இதற்குமேல்தான் சிரமமான வேலை. எந்தச் செய்தியை முதலில் சொல்ல வேண்டும்; அதாவது எதை முகமாக அமைக்க வேண்டும். அதை அந்தத் தலைப்பின் உடலாக அமைக்க வேண்டும். எந்தச் செய்தியை அந்த நூலின் உயிராக அமைக்க வேண்டுமென சிந்தித்து வரிசைப் படுத்தவேண்டும். இங்கு ஒரு அம்புக்குறி. அங்கு ஒரு அம்புக்குறி போட்டு இதற்கு அடுத்து இருபதாம் பக்கத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அதற்கு அடுத்து எழுபதாம் பக்கத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றெல்லாம் அச்சகத்தாரை அச்சுறுத்தாமல்

ஸ்கிரிப்டை ஒழுங்காக, நேர்த்தியாக சீர்செய்து, அச்சகத்தாரிடம் கொடுங்கள்.

அச்சாக்கிய பிறகு ஒருமுறைக்கு பலமுறை பிழைதிருத்தம் செய்துகொடுங்கள். கட்டி முடித்த வீட்டை வாஸ்து பார்த்து ஆங்காங்கே இடித்துக் கட்டுவதைப்போல, அச்சாக்கிப் பிழைதிருத்தம் செய்யும்போது, இதை மாற்றினால் நன்றாக இருக்குமே, அதை மாற்றினால் சிறப்பாக இருக்குமே என்றெல்லாம் அங்கலாய்க்காதீர்கள். நான் நூலுக்குண்டான ஸ்கிரிப்டை பதிப்பகத்தாரிடம் ஒப்படைத்துவிட்டால் அடிக்கடி குறுக்கே நுழைந்து அவர்களுக்கு எந்த இடையூறும் கொடுக்க மாட்டேன். திரு. ரவி தமிழ்வாணன் அவர்கள் என்னுடைய புத்தகங்களை தானே எழுதிய, தான் வெளியிடுகின்ற தன்னுடைய புத்தகமாகவே மனதில் ஏற்றுக்கொண்டு சிறப்பாக நேர்த்தியாக முடித்துக் கொடுப்பார். அதனால்தான் என்னால் ஒரே ஆண்டில் இரண்டு புத்தகங்கள் கூட வெளியிட முடிந்தது. தாளின் அமைப்பு இப்படி இருக்க வேண்டும், எழுத்தின் வடிவம் இதைப்போல இருக்க வேண்டும் என்பதைக் கூட நான் சொல்வது கிடையாது. நூலை அவர்களே அழகாகத் தயார் செய்து என் விலாசத்துக்கு அனுப்பி விடுவார்கள். அதுதான் மணிமேகலைப் பிரசுரத்தின் தனிச்சிறப்பு. காரணம், அவருடைய தந்தையார் தமிழ்வாணன் காலத்திலிருந்து பெற்ற நீண்ட நெடுங்கால அனுபவம்.

இந்த உலகில் நாம் வாழ்கின்ற நாட்கள் குறைவுதான். அதற்குள் சிறப்பான வாழ்வு வாழ்ந்தாக வேண்டும். இந்தச் சமுதாயத்தில் கொஞ்சகாலமாவது நம்